Drinking Water Supply Scheme for Sivaganga Town

* 47. Q.—THIRU M. SANKARALINGAM (on behalf of THIRU P. THIRUGNANASAMBANDAM): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Scheme for the provision of Drinking Water Supply for Sivaganga Town has been taken up for execution; and

(b) if so, when it will be executed?

சிவகங்கை நகர குடிநீர் திட்டம்.

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. பி. திருஞானசம்பந்தம் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சிவகங்கை நகர குடிநீர் திட்ட வேலை தொடங்கப்பட்டு விட்டதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். இந்த வேலை 6—9—1971-ல் தொடங்கப்பட்டது.

(இ) சிவகங்கை குடிநீர்த் திட்டம் 1974-ம் ஆண்டு முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: இன்னும் எத்தனை நகராட்சிகளிலே குடிதண்ணீர் திட்டம் தொடங்கப்பட்டிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மொத்தம் நகராட்சிகள் 99. அதிலே குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்ட நகராட்சிகள் 80. இன்று வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிற நகராட்சிகள் 10. எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய நகராட்சிகள் 9 ஆகும்.

Bogus Consent Letters from the Engineering Graduates and Diploma-holders

* 56. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that Contractors obtain bogus consent letters from the Engineering Graduates and Diploma-holders for the purpose of claiming full amount on bills; and

(b) if so, the action proposed to be taken by the Government to avert such misdeeds?

[1973 பிப்ரவரி 7

பொறியியல் பட்டதாரிகளிடமிருந்தும், பொறியியல் பட்டயதாரர் களிடமிருந்தும் போலி இசைவுக் கடிதங்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பணப்பட்டிகளின் பேரில் முழுத் தொகையும் கேட்டுப் பெறுவதற்காக, ஒப்பந்தக்காரர்கள், பொறியியல் பட்டதாரிகளிட மிருந்தும், பொறியியல் பட்டயதாரர்களிடமிருந்தும் போலி இசைவுக் கடிதங்களைப் பெறுகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அத்தகைய ஒழுங்கீனங்களைத் தவிர்ப்ப தற்காக அரசு மேற்கொள்ளக் கருதியிருக்கும் நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) அரசின் கவனத்திற்கு இது மாதிரிச் செய்வதாக வரவில்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த அரசாங்க பி.டபிள்.யூ. காண்ட்ராக்ட் எடுப்பவர்கள் ரூ. 50 ஆயிரத்துக்கு மேலாக வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்கள் பொறியியல் பட்டதாரிகள், பட்டயதாரர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும். அப்படி யாரையும் வேலைக்கு வைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆனால் அவர்களை வேலைக்கு அமர்த்துவதாக பொய் சர்டிபிகேட் கொடுத்து, பணம் பூராவையும் வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள் என்று பரவலாக பலர் என்னிடத்திலே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இந்த மாதிரி நிலைமை இருப்பதைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு அங்கத்தினருடைய கேள்வியைப் பொறுத்த வரையில் நான் தலைமைப் பொறியாளர்களைக் கேட்டபோது, அது போன்று ஒரு புகாரும் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே விதி முறைகள் போட்டு

" The rules stipulated in the above G.O. do not require that the Contractors should produce any consent letter from the technical personnel as a condition to the contract ".

அப்படி கன்செட் லெட்டர் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று விதிமுறை எதுவும் இல்லை. ஆனால் கான்ட்ராக்ட் கொடுக்கும் போது ரூ. 50 ஆயிரத்திற்கு மேல் உள்ள காண்ட்ராக்ட்டிலே டெக்னிக்கல் அஸிஸ்டென்ட்டாக டிப்ளமோ ஹோல்டர்ஸ், டிகிரி ஹோல்டர்ஸ் இவர்களைத் தான் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அப்படி விதிமுறை இருக்கும் போது அந்த டெண்டரை பைனலைஸ் செய்யும்போது, அந்த ஒரிஜனல் சர்டிபிகேட்டைக் கொண்டுவரச்சொல்லி, அதைப் பரிசீலித்து வருகிறார்கள். இதிலே அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதில்லை என்று ஒரு தலைமைப் பொறியாளர் ஒருவர் அல்ல, சீப் இன்ஜினியர், ஜெனரல் சீப் இன்ஜினியர், ஹைவேஸ் சீப் இன்ஜினியர், நேஷனல் ஹைவேஸ் ஆகிய மூன்று தலைமைப் பொறியாளர்கள் சொல்லுகிறார்கள். வேறு விவரம் எதுவும் இல்லை. அப்படி யாராவது குறிப்பிட்ட அத்தகைய தவறு செய்வதாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியுமானால், அந்தத் தகவலை அரசுக்கு அனுப்பலாம். இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். சில தவறுகள் அப்படி ஏற்பட்டு ஓரிரு காண்ட்ராக்ட்களிலெல்லாம் பெனல்டி விதிக்கப்படுகிறது. பெனல்டி விதிக்கப்பட்ட பிறகு, அதைப்பற்றியெல்லாம் பரிசீலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

THIRU G. SWAMINATHAN: Mr. Deputy Chairman, Sir, besides representations received by me, letters have appeared in the press also. I may even send some of the copies of the letters to the Hon. Minister. What actually happens is this: The unqualified contractors get the certificates from the technical personnel and after giving them a small amount, they get the full amount from the department. May I know whether the Government will see to it that technical people are really employed by the contractors, and whether instead of merely getting the certificates of the qualified personnel at the time of finalising the tender, the Government will introduce checks by authorities concerned to see whether they are continuously working under those contractors?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, எனக்குள்ள சந்தேகம் எல்லாம் அப்படிப் பத்திரிகையில் வரக்கூடிய லெட்டர்கள் எல்லாம் போனஃபைடியா அல்லது போகஸா என்பதுதான். அந்த மாதிரிக் குறைபாடுகளை அரசாங்கத்திற்கு எழுதியனுப்பலாம். குறிப்பிட்ட கான்ட்ராக்டர் தவறு செய்வதாக அரசாங்கத்திற்கு எழுதினால், நிச்சயமாக அரசாங்கம் நடவடிக்கை

எடுக்கும். படித்தவர்கள், பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் கொடுப்பதற்காகத்தான் அந்த விதிமுறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, காண்ட்ராக்டர்களுக்குச் சலுகை அளிப்பதற்காக அல்ல. அந்த விதிமுறையை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற புகார் பற்றி எந்தத் தகவலும் இல்லை. அப்படி ஏதாவது இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் தகவல் கொடுக்கலாம். அப்படிப்பட்ட காண்ட்ராக்டர்களை லிஸ்டிலேயிருந்து 'ரிமூவ்' செய்துவிடலாம். அவர்களை லிஸ்டிலே வைத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை.

THIRU M. RAJAH IYER: Mr. Deputy Chairman, Sir, I find that some contractors call themselves Engineering Contractors, while others call themselves mere contractors. May I know whether there is any distinction officially between these two sections of contractors?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றி எனக்குத் தெரியாது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் பேராசிரியர். அதுபற்றி அவர் விளக்கங்கள் சொன்னால், ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

State Minor Ports Fund, State Landing and Shipping Funds and State Pilotage Funds

* 57 *Q.*—THIRU V. ISVARMURTHI: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the total amount available as on date at (1) the State Minor Ports Fund, (2) the State Landing and Shipping Funds and (3) State Pilotage Funds; and

(*b*) the sources of income for these funds?

மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, மாநில இறக்குமதி—ஏற்றுமதி நிதி, மாநில மாலுமிகள் நிதி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) (1) மாநிலச் சிறு துறைமுகங்கள் நிதி, (2) மாநில இறக்குமதி—ஏற்றுமதி நிதி, (3) மாநில மாலுமிகள் நிதி ஆகியவற்றில் இன்றைய நிலவரப்படி உள்ள மொத்தத் தொகை எவ்வளவு?